Balasundaram Soba[1]

# Challenges Encountered by Schools in Implementing Compulsary Education
# கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள்

(1) Department of Education and Childcare, Eastern University, Sri Lanka.
(nisoba@gmail.com)

**Abstract:** It is obvious that education is the base for the long lasting development of a country. At times there may be many challenges and obstacles upon the smooth implementation of compulsory Education. In this regard, this research aims at identifying the challenges encountered by the schools of Manmunai South West Educational division in the Batticaloa district. This research clearly states the importance of compulsory education in a child's life and by identifying the challenges in the implementation of compulsory education it discovers the reasons why the students did not receive compulsory education.

**Keywords:** Compulsary education, Challenges, Implementing

**ஆய்வு சுருக்கம் :** ஒரு நாட்டின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கு அத்திவாரமாக அமைவது கல்வி என்பதனை எவரும் மறுக்க முடியாது. அதனடிப்படையில் கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களை இனங் காணுவதற்காகவே மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வியில் பின்தங்கிய நிலையிலுள்ள மண்முனை தென் மேற்குக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாகவுள்ளது. இவ்வாய்வானது கட்டாயக் கல்வியை அமுலாக்குவதிலுள்ள சவால்களையும், கட்டாயக் கல்வியை மாணவர்கள் பெற்றுக் கொள்ளாமைக்கான காரணங்களையும் ஆராந்து, கட்டாயக் கல்வியின் அவசியத்தை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் எடுத்துக் காட்டுகின்றது. இதனூடாக நாட்டினை நிலைத்து நிற்கும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என்பது திண்ணம்.

## Introduction to the research

## Introduction

ஒரு நாட்டின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கு உந்து சத்தியாக அமைவது கல்வியேயாகும். இந்த வகையில் ஒரு பிள்ளை தன் வாழ் நாளில் கற்றுக் கொள்ளும் சகல கல்விச் செயற்பாட்டுக்கும் அத்திவாரமாக அமையும் கட்டாயக் கல்வி வழியமைக்கின்றது. கட்டாயக் கல்வி பற்றி 1939ம் ஆண்டு 31ம் இலக்க கல்விச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் நிமிர்த்தம் 5-14 வயதுக்குட்பட்ட அனைவரும் கல்வியைக் கற்றுக் கொள்வது அவசியமாகும். இப் பருவத்துப் பிள்ளைகளின் கல்வியே ஒரு நாட்டின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கு அத்திவாரமாக அமைவதால் தற்பொழுது கட்டாயக் கல்வி வயது 5-16 வயது வரையென கட்டாயமாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந் நிலையில் நாட்டில் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்தி மாறும் உலகில் சவால்களை எதிர் கொள்ளவும், அவற்றை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்வதற்கும் கட்டாயக் கல்வி அடிப்படையாக அமைகின்றது.

## Background of the study

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படல், பாடசாலையை விட்டு இடை நடுவே வெளியேறுதல், பாடசாலைக்கு வருகை தராமல் வீட்டிலேயே இருத்தல், பாடசாலையில் சிறப்பான முறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமை, போதியளவு மனித, பௌதிக வளப்பற்றாக்குறை, பெற்றோர் கல்வி தொடர்பாக அக்கறை செலுத்தாமை போன்ற பல பின்னணிகளிலே இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் கட்டாயக் கல்வியைப் பெற்றுக்கொள்ளாமல் அனேகமானோர் வீட்டில் இருப்பதற்கு குடும்பப் பின்னணி, பாடசாலைப் பின்னணி, பொருளாதார நிலை, போதிய உள்ளீடுகள் இன்மை, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் போன்ற பல்வேறு பின்னணிகள் காரணமாகின்றன. இவ்வாறு பிள்ளைகளின் கல்வி பாதிப்பானது நாட்டின் அபிவிருத்தியை ஒட்டு மொத்தமாகவே பாதிப்படையச் செய்கின்றது.

## Justification to the study

கட்டாயக் கல்வி பெறும் வயதிலேயே பிள்ளைக்கான ஆளுமை, நுண்ணறிவு வளர்ச்சி, கற்பனை அமைப்புக்களைக் கண்டுபிடித்தல், தமது தீர்ப்புக்களுக்கு தர்க்க ரீதியான நியாயங்களை வெளிப்படுத்தல் என்பன விருத்தியடைவதனால் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது. இதனாலேயே ஒரு நாட்டின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

பெற்றோர்களுக்கு கட்டாயக் கல்வியின் அவசியத்தை புலப்படுத்த வேண்டியுள்ளது. அத்தோடு கட்டாயக் கல்வியைப் பெறும் வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இவ்வாய்வு அவசியமாகின்றது.

கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளையும் இவ்வாறு மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் போவதற்கு பெற்றோர்கள் எவ்வாறு காரணமாகின்றனர், கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோர் எவ்வாறான பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கின்றனர் என்பதைக் கண்டறிய இப்பிரதேசத்திற்கு இவ்வாய்வு அவசியமாகின்றது.

## Research Objectives

1. கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்ளப் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை இனங்காணுதல்.
2. இப் பிரதேச மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்ளாமைக்கான காரணங்களை கண்டறிதல்.
3. மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்குப் பாடசாலை எந்தளவிற்கு பங்களிப்புச் செய்கின்றது என்பதை அறிதல்.
4. 6-14 வயதுடைய மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் பெற்றோரின் பங்களிப்பு எத்தகையது என்பதை இனங்காணுதல்.

## Statement of the problem

1. கட்டாயக் கல்வியின் அவசியம் பற்றி அறியாதவர்களாய் பெற்றோர், சமூகம் காணப்படுவதோடு, பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் பெற்றோர் விருப்பம் குறைவாக இருத்தல்.
2. பாடசாலையுடன் பெற்றோரின் இடைத்தொடர்பு குறைவாக இருப்பதோடு, பெற்றோாகள் கல்வி பற்றிய அக்கறை இல்லாமல் காணப்படல்.
3. அதிகரித்த மாணவர் இடைவிலகல் காணப்படுதல்.
4. பருவகால தொழில் நடைபெறும் நாட்களில் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காமை.
5. மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படல்.
6. மாணவர்களில் பெரும்பாலானோர் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் காணப்படல்.
7. பிரதான பாடங்களுக்கான ஆசிரியர்கள் போதியளவு இல்லாமை.
8. பாடசாலையில் கற்பித்தல் துணைச்சாதனங்கள், ஆய்வு கூட வசதிகள், ஆய்வு கூடப் பாவனைக்குரிய பொருட்கள் போன்றன இல்லாமை.
9. ஆசிரியர்கள் சிறந்த கற்பித்தல் முறைகளையும், நுட்பங்களையும் கையாள முடியாதுள்ளமை.
10. ஆசிரியர்களில் பெரும்பாலானோர் நகர்ப் பிரதேசத்திலிருந்து வருகை தருபவர்களாகக் காணப்படல்.

## Literature Review

இலக்கிய மீளாய்வு என்பது ஓர் ஆய்வாளரால் குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட எண்ணக்கருவினை அறிவதனூடாகத் தனது ஆய்வுப் பிரச்சினை சார்பான எண்ணக்கருவைப் புதிதாக வடிவமைத்துக் கூர்மைப்படுத்துவதற்கு உதவுகின்றது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக இலக்கிய மீளாய்வுச் செயற்பாடானது பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் ஆய்வுத்

தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், வாழ்வியற் களஞ்சியங்கள், குறிப்புக்கள், சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து வெளியீடுகளையும் தேடிக்கண்டு பிடித்து பல்வேறு தலைப்புக்களில் இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1939ம் ஆண்டின் 31ம் இலக்க கல்விச் சட்ட ஏற்பாடுகள், அதனைத் தொடர்ந்து 1943, 1959, 1964, 1967ம் ஆண்டுகளில் கட்டாயக் கல்வி பற்றி கூறப்பட்ட கருத்துக்கள், 1978ல் கட்டாயக் கல்வியை உறுதிப் படுத்தும் பிரமாணங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை, 1997 ழேஎநஅடிநச 25 திகதி அதி விசேட வர்த்தக மானியில் 1003∴5 என்ற இலக்கம் கொண்டு பிரசுரிக்கப்பட்ட கட்டாயக் கல்விச் சட்டம், இச் சட்டத்தில் முக்கியத்துவப்படுத்திக் கூறப்பட்ட விடயங்கள், 1998 ஜனவரியில் ஒழுங்கு விதிகள் அமுலுக்கு வந்தமை தொடர்பான கருத்துக்கள், பாடசாலை மட்ட கட்டாயக் கல்விக்குழு, பிரதேச மட்டக் கட்டாயக் கல்விக்குழு ஆகியவற்றின் செயற்பாடுகள், இலங்கையில் கட்டாயக் கல்வி அமுலாக்கப்படும் விதம், ஜனாதிபதி துரித நடவடிக்கை குழுவால் சிபார்சு செய்யப்பட்டு அமுல்படுத்தப்படும் செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் யாவும் பொதுக் கல்விச் சீர்திருத்த அறிக்கை, பத்திரிகைகள், அவை தொடர்பான நூல்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கல்வியானது நகர, கிராம, பிரதேச வேறுபாகள் இன்றி அனைத்து விதமான பிள்ளைகளும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கல்வியில் சமத்துவம் பற்றிய கருத்துக்கள், ற.ற.உ கன்னங்கராவினால் 1.10.1945 முதல் அமுலாக்கப்பட்ட இலவசக் கல்வித் திட்டம், விலைமதிப்பற்ற முத்தாக அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியினால் பெற்றுக் கொள்ளும் நன்மைகள், பாடசாலைகளில் ஆரம்பமான தாய்மொழிப் போதனை, புலமைப் பரிசில் திட்டம் போன்றவாறான சமவாய்ப்புக் கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்த திட்டங்கள் பற்றிய இலக்கிய மீளாய்வுச் செயற்பாடானது சஞ்சிகைகள், அவை தொடர்பான நூல்களிலுருந்து பெறப்பட்டன.

இன்று பாடசாலைகளில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ள இடைவிலகள், ஒரு மாணவன் இடைவிலகுவதற்கு குடும்ப வறுமை, பாடசாலை, சூழல், பொருளாதாரம் போன்ற காரணிகள் எவ்வாறு காரணமாகின்றது போன்றவாறான விடயங்கள் யாவும் இணைய தளங்களிலிருந்து பெறப்பட்டன.

கட்டாயக் கல்வியைக் கற்றுக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள், பாடசாலைக் காரணிகள், சமூகப் பொருளாதாரக் காரணிகள் பற்றியும், கட்டாயக் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய உயர் பண்புகள் பற்றியும் வாழ்வியற் களஞ்சியங்கள் மூலமும் அவை தொடர்பான நூல்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வாறு பல்வேறு வழிகளில் இலக்கிய மீளாய்வுச் செயற்பாடு இடம் பெற்றுள்ளது.

## Research Methodology and Data Analysis

ஆய்வு முறைமை சிறப்பாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத்தன்மையானதாக காணப்படும். இந்த ஆய்வு முறையில் ஆய்வினை மேற்கொள்ள எவ்வாறு தகவல்கள் பெறப்பட்டன, மாதிரித்தெரிவு எவ்வாறு இடம் பெற்றது, எந்த ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டது, தரவு சேகரிக்க எவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வு செய்யப்பட்ட இடங்கள், ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள், தரவுப்பகுப்பாய்வு முறைகள், என்பன தொடர்பான விடயங்கள் இந்த ஆய்வு முறையியலில் உள்ளடக்கப்படுகின்றன.

ஆய்வு என்பது தொடர்ச்சியான தேடலை முன்னெடுக்கின்றது. இந்த வகையில் மண்முனைக் தென்மேற்குக் கோட்டப் பாடசாலைகளில் கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களை அடிப்படையாகக் கொண்டதாக மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு அளவைநிலை ஆய்வாக வடிவமைக்கப் பட்டுள்ளது. அளவை நிலை ஆய்வே தற்கால நிகழ்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான தரவு, தகவல்களை அழிக்கும் முறையாக அமைந்துள்ளது.

கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் வலய, கோட்டக் கல்வியதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் போன்றோர் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தனித் தனியாக நோக்கி உண்மை நிலையை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது

ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவுகள், தகவல்களின் வகை, தரம் என்பனவற்றில் தங்கியுள்ளது. அந்த வகையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு,

1. வினாக் கொத்து
2. நேர் காணல்
3. கலந்துரையாடல்
4. ஆவணங்கள் ஆகிய கருவிகள் செப்பமாக வடிவமைக்கப்பட்டன.

ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசமானது 21 பாடசாலைகளைக் கொண்டுள்ள போதிலும் பாடசாலை செல்லாத, இடைவிலகிய மாணவர்கள் அதிகமாகக் காணப்பட்ட 10 பாடசாலைகள் ஆய்வு மதிரியாகத் தெரிவு செய்யப்பட்டன.

**Table 3.1: Schools chosen for research**

| பாடசாலையின் பெயர் | வகை | (5-14) வயதுக்குள் பாடசாலை செல்வோர் | (5-14) வயதுக்குள் இடைவிலகியோர் |
|---|---|---|---|
| மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் | 1C | 789 | 165 |
| மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் | 1C | 525 | 155 |
| மட்/குளுவினமடு விநாயகர் வித்தியாலயம் | III | 17 | 94 |
| மட்/கடுக்காமுனை வாணி வித்தியாலயம் | II | 256 | 76 |
| மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் | II | 494 | 76 |
| மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம் | 1C | 486 | 49 |
| மட்/கொக்கட்டிச்சோலை இ.மி பாடசாலை | 1C | 653 | 45 |
| மட்/பண்டாரியாவெளி த.க.பாடசாலை | II | 144 | 44 |
| மட்/கற்சேனை அரசினர் தழிழ் கலவன் பாடலை | II | 131 | 35 |
| மட்/முதலைக்குடா மகா வித்தியாயலம் | 1AB | 487 | 35 |

**Source:** Divisional Education office

தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளும் ஆய்வுக் குடித்தொகையில் உட்படுவதுடன் மாதிரிகளாக 10 பாடசாலைகளின் அதிபர்களும், 78 ஆசிரியர்கள், 20 பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கோட்ட, வலயக் கல்விப்பணிப்பாளர்கள் போன்றோர் மாதிரிகளாகத் தெரிவாகினர். 10 பாடசாலைகளிலும் கற்பிக்கின்ற 234 ஆசிரியர்களையும் 3:1 என்ற வீதத்தில் எளிய எழுமாற்று முறை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டள்ளனர்.

அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், போன்றோரிடம் பெற்ற தரவுகள், தகவல்கள் யாவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, பகுப்பாய்வுக்கு உதவியாக கணனி மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் நேர்த்தியான நம்பகமான பகுப்பாய்வாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## Data analysis

கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களை அறிந்து கொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட விடயங்கள், பல்வேறு வழிகளிலும் வினவப்பட்டன. இந்த வகையில் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்ளாத பிள்ளைகள், பிள்ளைகள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக்கொள்ளாமல் வெளியேறியமையில் செல்வாக்குச் செலுத்தும் பாடசாலை, சமூகக் காரணிகள், மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பெற்றோர், பாடசாலைகளின் பங்களிப்புக்கள் போன்றவற்றை கண்டறியும் நோக்குடன் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் படி அதிபர்களின் கருத்துக்களுடாக அறியப்பட்ட விடயங்களாவன

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் 67% மாணவர்கள்

கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்கின்ற போதிலும் 33மூ மாணவர்கள் கட்டாயக் கல்வியில் இருந்து விடுபட்ட நிலையில் காணப்படுகின்றார்கள் என்பது பெறப்பட்ட தரவுகளில் இருந்து அறியப்பட்டுள்ளது.





Fig 4.1

இந்நிலையில் மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களில் 67% வீட்டுச் சூழல் காரணி செல்வாக்குச் செலுத்துவதாகவும், 33மூ பாடசாலைச் சூழல் காரணி செல்வாக்குச் செலுத்துவதாகவும், அறிய முடிந்துள்ளது.





Fig 4.2

மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற முடியாமைக்கான வீட்டுச் சூழல் காரணங்களாக, பெற்றோருக்குக் கல்வி பற்றிய போதிய விழிப்புணர்வு இன்மை, குடும்ப வறுமை காரணமாக பிள்ளைகளைப் பருவ காலத் தொழிலில் ஈடுபடுத்தல், பிள்ளைகளுக்கு கல்வி பற்றிய முன்மாதிரி இன்மை, பாடசாலை செலவுகளை கையாள்வதற்கு பெற்றோரினால் இயலாமை போன்றவற்றையும், அதே போல் பாடசாலைக் காரணிகளாக, பாடசாலை பௌதீக வளங்கள் போதாமை, குறித்த பாடத்துக்கான ஆசிரியர் பற்றாக்குறை- (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்), ஆசிரியர்களில் பெரும்பாலானோர் நகரப் பகுதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதால் மாணவர்களைப் பற்றிய பின்புலத்தை அறியாதுள்ளனர் இவை போன்ற காரணங்களையும் அதிபர்கள் இனங்காட்டியுள்ளனர்.

இதே போல் ஆசிரியர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன மாணவர்களில் 66மூ மாணவர்கள் நாளாந்தம் பாடசாலைக்கு சமூகமளிக்கின்ற போதிலும் 34மூ மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காதுள்ளமையை ஆசிரியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காமைக்கான காரணங்களாக, வறுமை பெற்றோர்களின் அக்கறையீனம், தந்தையுடன் பிள்ளைகளை கூலி வேலைக்கு அனுப்புதல் போன்றவற்றை இனங்காட்டியுள்ளனர்.





Fig 4.3

பாடசாலைச் சூழல் பற்றிக் குறிப்பிடுகையில் கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைச் சூழல் பொருத்தமாக அமையவில்லையென 65% ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்





Fig 4.4

இவ்வாறே பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன ஆய்வுப் பிரதேசத்தில் 67% மேற்பட்ட மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளதாகவும், கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பின்வரும் சவால்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களை ஒன்றிணைப்பது கடினம், செயற்றிட்டங்களை அமுல் செய்வதில் இடர்பாடுகள் ஏற்படல், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கருத்துக்களைச் செயறபடுத்தாமை.





Fig 4.5

பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை அறியாமையினால் பிள்ளைக்கு கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் 25% பெற்றோர்களே அக்கறையுடன் செயற்படுவதாகவும் ஏனையவர்கள் ஓரளவே அக்கறை செலுத்துவதாகவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.





Fig 4.6

வலயக்கல்வி, கோட்டக் கல்வி பணிப்பாளருடனான நேர்காணலூடாக தெரிவிக்கப்பட்ட விடயங்களாவன, மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற முடியாமல் வெளியேறுகின்றமைக்கான காரணங்களாக பின்வருவனவற்றை இனங்காட்டியுள்ளனர்.

பெற்றோரின் வறுமை, பெற்றோர் கல்வி பற்றிய விழிப்புணர்வின்மை, பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையேயான தூரம் அதிகம், போக்குவரத்து வசதியின்மை, சமூகத்தின் கல்வி பற்றிய எதிர்மனப்பாங்கு. பொருத்தமற்ற பாடசாலைச் சூழல், எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் அதிகம், அறிவாற்றலுக்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கிரமமாக நடைபெறாமை, பாடத்திட்டத்துக்கேற்ப மட்டுமே பாடங்களை நடத்திச் செல்லல், மாணவ ஆசிரிய இடைத்தொடர்பு குறைவாகக் காணப்படுதல், பொருத்தமான கற்பித்தல் நுட்ப முறைகளை கையாளாமை போன்றனவாகும்.

## Research findings and recommendations

மாணவர்கள் தொடர்ச்சியாக பாடசாலைக்கு வராமல் இருப்பதுடன் வகுப்பறைச் செயற்பாடுகளில் அசமந்த போக்கை வெளிப்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் வீட்டிலிருந்து பாடசாலைக்கு சமூகமளிக்கும் போது கற்பதற்கான ஆயத்தத்துடன் வராததால் கல்வி மீதுள்ள வெறுப்பினால் காலப் போக்கில் அவர்கள் சமூகத்தில் தரித்து நிற்கும் நிலை காணப்படுகின்றது.

பாடசாலைச் சூழல் மாணவர்கள் விரும்பும் வகையிலாக காணப்படாமை, வகுப்பறை மட்டத்தில் மாணவர்களின் அறிவாற்றல் நிலையை இனங்கண்டு ஆசிரியர்கள் கற்பிக்க முடியாமை இதனால் மாண வர்களுக்கு பாடசாலை மீதான விருப்பின்மை காரண மாக பாடசாலைக்குச் செல்லாதோர் தொகை அதிக ரித்துக் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது

ஆய்வுப் பிரதேசத்துக்குட்டபட்ட பெற்றோர் கல்வியினால் பெற்றுக் கொள்ளும் பயனை அறியாதவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தாத நிலையிலும் கட்டாயக் கல்வியை தங்களது பிள்ளைகள் அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தெளிவின்மையால் அவர்கள் கல்வி பற்றி எதிர் மனப்பாங்கையே கொண்டுள்ளனர்.

பிள்ளைகள் வசிக்கும் வீட்டில் கற்பதற்கான அடிப்படை வசதிகள் இன்மை, கிடைக்கும் வருமானத்திலிருந்து கல்விக்கான செலவை மேற்கொள்ள பெற்றோர் விரும்பாமை, கல்விக்கான ஒத்துழைப்பை பெற்றோர் வழங்காமை, போன்ற காரணங்களால் மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் பாரிய இடர்பாடுகள் ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசமானது பின்தங்கிய நிலையில் உள்ளதால் ஆசிரியர்கள் நகரப் பிரதேசத்திலிருந்து நாளாந்தம் வருகை தருபவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் சமூகத்தைப் பாடசாலைக்குள் உள்ளீர்க்கும் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது

பாடசாலைச் சூழலுடன் பெற்றோர் இணைந்து செல்லல் குறைவாகக் காணப்படுவதோடு, பெற் றோர்கள் வறுமையில் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்ய தந்தையுடன் ஆண் பிள்ளைகளை கூலித் தொழிலுக்கு அனுப்பும் செயற்பாடு அதி கமாகக் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது.

இடப் பெயர்வு காரணமான கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்ள பிள்ளைகளுக்கு பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை தோன் றியதுடன், கட்டாயம் பிரதேசத்தை விட்டு மக்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட தனால் அக் காலப்பகுதியில் மாணவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டமை இதனால் சிறு தொழில்களான மந்தை மேய்த்தல், களை பிடுங்குதல், கதிர் பொறுக்குதல், விறகு வெட்டுதல் போன்ற கூலி வேலையில் ஈடுபட்டனர். இதனால் கட்டாயக் கல்வியை அமுல்படுத்துவதில் பாரிய இடர்பாடுகள் தோன்றியுள்ளது.

மாணவர்களில் பெரும்பாலானோர் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் காணப்படுவதால் அவர்களை மேலதிக கற்றல் கற்பித்தல் செயற் பாட்டுக்கு உட்படுத்த முடியாத நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கற்றல் கற்பித்தல் செயற்பாடானது கல்விச் சுமையாகவே காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இவ் வாறாக பல்வேறான சவால்கள் கண்டறியப்பட்டன.

## Suggestions;

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் கடமை யாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் போன்றவர்களுக்கு கட்டாயக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதுடன், கட்டாயக் கல்விக் குழுக்கள் மூலம் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பும் செயற்றிட்டங்களை முன்னெடுத்தலும், கட்டாய வரவுக் குழு மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் வேண்டும்.

மாணவர்களின் அறிவாற்றல் நிலைக்கேற்ற வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதோடு, கற்பித்தல் செயற்பாட்டின் போது நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களையும், பாடத்துக்கு ஏற்ற விதத்திலான கற்பித்தல் நுட்பங்களையும் கையாளல் வேண்டும்.

கற்பிக்கும் போது மாணவர்களின் பின்னணியை இனங்கண்டு ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும்.

பெற்றோர் மத்தியில் கல்வி கற்பதிலுள்ள நன்மைகளை எடுத்துக் கூறி பெற்றோர்களின் மேலதிக செலவைக் கட்டுப்படுத்த ஆலோசனைகள் வழங்குவதுடன், பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தல்.

பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியினைப் பெற்றுக் கொடுத்தல்,

பாடசாலைக்குச் சீராக வராத மாணவர்களின் பெற்றோர்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளல்

மாணவர்களின் சுய கற்றலை அதிகரிக்கும் வகையிலும், கல்வி நாட்டத்தை அதிகரிக்கும் வகையிலும் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் இணைந்த வகையில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் நகர் பிரதேச ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்

சகல பாடங்களுக்கும் உரிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட பாடங்களைப் போதிப்பது தொடர்பில் போதுமான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்புக்களிலிருந்து மொழித்திறன் விருத்திக்கான பிரத்தியக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஆசிரியர்களும் இரண்டு பிள்ளைகளைப் பொறுப்பெடுத்து அவர்களுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

பாடசாலைச் சூழலுடன் பெற்றோரை இணைக்கும் வகையில் பெற்றோர் ஆசிரிய சங்கம், கட்டாயக் கல்விக் குழு, என்பவற்றை உருவாக்கி அவற்றை வினைத்திறன் மிக்கதாக்குதல்.

கட்டாயக் கல்வி வயதில் தந்தையுடன் தொழிலுக்குச் செல்லும் ஆர்வத்தைக் குறைப்பதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

## Conclusion

உலக சந்தை போட்டி நிலையை முன்னெடுத்துச் செல்லும் ஒன்றாக இன்றைய கல்வியின் போக்கு காணப்படுகின்றது. இந்நிலையில் மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பெற்றுக் கொள்ளாமையில் குடும்பம், பாடசாலை, சமூகம் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் பல்வேறு விதமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை தொடச்சியாகப் பெற வேண்டும் என்பதில் அக்கறையற்ற நிலையிலுள்ளதனை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட பல செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. இதனால் கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றன.

இதன் காரணமாக பிள்ளைக்கு அறிவுரை வழங்க வேண்டிய முக்கிய பொறுப்புள்ளவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் நகர்ப்புறத்திலிருந்து வருவதனால் பாட விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்த முடிகின்றது. அத்தோடு கட்டாயக் கல்வி வயதுக்குரிய முறையில் கற்பித்தல் செயற்பாடுகளை கையாள முடியாது ள்ளமையால் ஆசிரியர்களும், மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் பல பிரச்சினைகளை கைளாளு கின்றார்கள். எனவே மாணவர்களுக்கு பாடசாலை மீதான விருப்பமின்மையால் பாடசாலைக்குச் செல்லாதோர் தொகை அதிகரித்துக் காணப்படு வதனால் பாடசாலைகள் கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் சவால்களை எதிர்கொள்கின்றன.

இந்த வகையில் பெற்றோர்கள் கல்வி பற்றிய முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதோடு, ஆசிரியர்கள் பிள்ளைகள் விரும்பும் படியான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு அதிபர், கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் போன்றோர் பிள்ளையின் தேவையை இனங்கண்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் வறுமை நிலையிலுள்ள பிள்ளைக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே ஆய்வின் முடிவாகும். மேலே முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள் செயற்படும் போது கட்டாயக் கல்வியை அமுலாக்குவதிலுள்ள சவால்களை வெற்றி கொள்ள முடிவதோடு நாட்டின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

## References

அலியார்-யு-எல், 1995, **கல்வியியல் நோக்கு**, பைத்துல் றிக்மா பதிப்பகம், சம்மாந்துறை.

அஞ்சலா டப்ளிவ் லிட்டில், 2000, **இலங்கையில் ஆரம்பக்கல்விச் சீர்திருத்தம்**, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய.

அருள்மொழி-செ, 2008, **கல்வி ஆய்வு முறைகள்**, எவக்கிறின் அச்சகம், மட்டக்களப்பு.

உலகநாதர் நவரத்தினம், 2001, **எல்லோருக்கும் கல்வி** , ஏ-ஜே-பதிப்பகம் கொழும்பு.

கருணாநிதி-எம், 2008, **கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்** சேமமடு பதிப்பகம், கொழும்பு.

சந்திரசேகரம்-சோ, 1995, **புதிய நூற்றாண்டுக்கான கல்வி,** தர்ஷனா பிரசுரம்.

சந்திரசேகரம்-சோ, 1996, **கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள்,** கவிதா பதிப்பகம், மதுரை.

சின்னத்தம்பி-க, 2007, **கல்வி ஆய்வியல்**, நாகம்மால். சின்னத்தம்பி, அச்சுவேலி

தனராஜ்.தை, 2008, **ஒடுக்கப்பட்டோர் கல்வி**, இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை, கொழும்பு.

பெரேரா.டி.ஏ, 1997, **கற்பிப்பதற்கான சுதந்திரமும் கற்பதற்கான சுதந்திரமும்**, கல்வி ஆராய்ச்சித் துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

## சஞ்சிகைகள்

1. அகவழி, 2005, கஷ்டப் பிரதேசக் கல்விப் பிரச்சினைகள்.
2. அகவிழி, 2008, கல்வி ஓர் அடிப்படை உரிமை
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-12. தஞ்சாவுர் பல்கலைக்கழகம்.
4. பொதுக்கல்விச் சீர்திருத்த அறிக்கை – 1997.

**பத்திரிகைகள்.** வீரசேகரி பத்திரிகை, 13.03.2011, தினக்குரல், 15.02.2011

**இணையதள முகவரிகள்**

http//ta. Wikipedia.org / Wiki /Ma;T).

http//www.Wikipedia.org/wiki/Education.

http//www.tamilsguide.com.